# කාර්යසාධන හා වාර්ෂික ගිණුම් වාර්තාව-2013

# செயற்திறன் அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் -2013

# Performance Report and Annual Accounts - 2013



**දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - කිළිනොච්චිය**

**மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி**

**District Secretariat - Kilinochchi**

# செயற்திறன் அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் - 2013

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

# உள்ளடக்கம்


செயற்திறன் அறிக்கை– 2013 பக்கம்

1. மாவட்ட செயலரின் செய்தி 01

2. மாவட்ட செயலகத்தின் அறிமுகம்

2.1. மாவட்ட செயலகத்தின் தொலைநோக்கு மற்றும் பணிநோக்கு 02

2.2. மாவட்ட செயலகத்தின் குறிக்கோள் மற்றும் தொழிற்பாடுகள் 03

3. மாவட்டத்தின் அறிமுகம் 05

3.1. மாவட்டத்தின் நிர்வாகவரைபடம் 06

3.2. மாவட்டத்தின் அடிப்படைப் புள்ளிவிபரங்கள் 07

4. நிறுவன கட்டமைப்பும் அனுமதிக்கப்பட்ட ஆளணியும்

4.1. அமைப்பு வரைபடம் 08

4.2. அனுமதித்த ஆளணி 09

5. செயலாற்றுகை

5.1. பொது நிர்வாக செயற்பாடுகள் 11

5.2. சமூக மற்றும் கலாச்சார செயற்பாடுகள் 26

5.3. அபிவிருத்தி நடவடிக்கைகள் 38

5.3.1 வரிசை அமைச்சுக்கள் மற்றும் ஏனைய திணைக்களங்கள் 52

5.4. கணக்குப் பொழிப்பு அறிக்கை 54

## 1. மாவட்ட செயலரின் செய்தி

ஒரு மாவட்டத்தின் முன்னேற்றமானது மக்களின் பொது சேவைகள், அபிவிருத்தி நடவடிக்கைகளின் துரித வளர்ச்சி என்பவற்றிலேயே தங்கியுள்ளது. இவ் வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கு 2013 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்ட செயலகம், பொது நிர்வாக அமைச்சு, அதன் வரிசை அமைச்சுக்கள், திணைக்களங்கள், மற்றும் நான்கு பிரதேச செயலகங்கள் ஊடாக வினைத்திறனான செயற்திட்டங்களை நிறைவேற்றியுள்ளன. அந்த வகையில் 2013 ஆம் ஆண்டிற்கான செயல்த்திறன் மற்றும் கணக்கு அறிக்கையினை சமர்ப்பிப்பதில் பெருமையும், உவகையும் அடைகின்றேன்.

திறைசேரியினால் 2013 ஆம் ஆண்டு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியானது மக்களுக்கு சிறந்த சேவையை ஆற்றுவதற்கு சிக்கனமாகப் பயன்படுத்தப்பட்டது. இதற்காக மாவட்ட செயலகத்துடன் இணைந்து பிரதேச செயலகங்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், என்பன சிறப்பாக செயற்பட்டன.

பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஊடாக ஒதுக்கப்பட்ட நிதியானது செயல்திட்டங்கள் மூலம் வினைத்திறனுடன் நிறைவேற்றப்பட்டமை சிறப்பான அம்சமாகும். இதற்காக அனைத்து தரப்பினரும் உற்சாகத்துடன் செயற்பட்டனர். கிளிநொச்சி மாவட்ட மக்களின் வாழ்வியல் தேவைகளை மேம்படுத்த 2013ஆம் ஆண்டு பல வழிகளிலும் உதவிய அமைச்சுக்கள், திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள், நிறுவனங்களுக்கு, எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி றூபவதி கேதீஸ்வரன்
மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்
கிளிநொச்சி மாவட்டம்

## 2. மாவட்ட செயலகத்தின் அறிமுகம்

### 2.1. மாவட்ட செயலகத்தின் தொலை நோக்கு மற்றும் பணிநோக்கு

**தொலைநோக்கு**

"வெற்றிகரமானதும் தவறற்றதுமான பொதுச்சேவையை வழங்குதல்"

**பணி நோக்கு**

"அர்ப்பணிப்பு, விருப்பு மற்றும் நேர்மையான கருத்துள்ள சேவையை ஊக்கம் நிறைந்த பணியாளர்களின் மூலம் பொதுமக்களுக்கு வழங்குவதனூடாக அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்"

## 2.2. மாவட்ட செயலகத்தின் குறிக்கோள் மற்றும் தொழிற்பாடுகள்

### ➢ வினைத்திறனான மாவட்ட நிர்வாக முறைமை.

- மாவட்ட மற்றும் பிரதேச செயலக நிர்வாக செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- ஊழியர்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்
  (தனிநபர் கோவை, விடுமுறை , சம்பளம் மேலதிக நேர கொடுப்பனவுகள், விடுமுறை நாள் கொடுப்பனவுகள் , ஊழியர்களின் பிரயாண ஆணைச்சீட்டு, கடனுதவி).

- பொதுமக்களிற்கான சேவைகளை வழங்குதலும் அவற்றினை இலகுவில் பெற்றுக்கொள்வதற்கான வழிநடத்தல்களையும் மேற்கொள்ளல்
  - கடவுச்சீட்டு, அடையாள அட்டைகள் பெற்றுக்கொடுத்தல், மோட்டார் வாகன வரி, வியாபார அனுமதிப்பாத்திரங்கள், பிறப்பு இறப்பு மற்றும் திருமணபதிவு சான்றிதழ் வழங்குதல்.
  - போக்குவரத்து வழி அனுமதிகளை வழங்குதல்.
  - வாகனத்தை செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கல்.
  - வாக்களார் பதிவுகளை பெற்றுக் கொள்ளல்.
  - காணிக்கான உறுதிகள் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்குவதினை ஒழுங்குபடுத்தலும், காணிப்பிரச்சினையைத் தீர்த்தலும்
  - முதியோர்களுக்கும் மாற்றுத்திறனாளி களுக்குமான மாதாந்த உதவித்தொகை வழங்கல்
  - மக்களுக்கான உளவள மேம்பாட்டிற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
  - வேலையற்ற இளைஞர் யுவதிகளிற்கான தொழிற்பயிற்சி ளையும் பெண் தலைமைத்துவ குடும்பத்திற்கான சுயதொழில் பயிற்சிகளையும் ஊக்குவிப்புக்களையும் வழங்கல்.

### ➢ செயலகத்தின் குறிக்கோளை அடைவதற்கு வினைத்திறனான நிதி கொடுக்கல் வாங்கல் முறைமைகளை பின்பற்றலும் நடைமுறைப்படுத்தலும்

- மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீட்டினை உரிய அனுமதியுடன் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தலும் கணக்கு வைத்தலும்.
- ஊழியர்கள் தொடர்பான அனைத்துக் கொடுப்பனவுகளையும் வழங்கல்
- மாவட்ட செயலகத்தில் வைப்பிலுள்ள பணத்தை உரிய அனுமதியுடன் குறிப்பிட்ட தேவைக்காக பயன்படுத்தல்
- மாதாந்த, வருடாந்த அறிக்கைகளை திணைக்களங்களிற்கும் , அமைச்சுக்களிற்கும் திறைசேரிக்கும் அனுப்புதல்

- ஓய்வூதிய கொடுப்பனவுகளை வழங்கல்
- மாவட்ட, பிரதேச செயலகத்தினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற சேவைகளுக்கான கொடுப்பனவுகளை வழங்கல்
- வருடாந்த பொருள் கணக்கெடுப்பு, வருடாந்த பெறுகை திட்டத்தினை தயாரித்தல்

➢ **மாவட்ட கலை கலாசார பண்பாடு மற்றும் வினைத்திறன் வலுவூட்டுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளுதலும் அவற்றிற்கான வழிகாட்டல்களையும் மேற்கொள்ளல்**.

- கலை கலாச்சார விழாக்களை நடாத்துதல், மாவட்ட மற்றும் தேசிய அளவிலான நிகழ்வுகள்

➢ **மாவட்டத்திலுள்ள வளங்களை வினைத்திறன் மிக்கதாக பயன்படுத்தலும் அதற்கான திட்டங்களையும் மேற்கொள்ளுதலும்**.

- இதனை மாவட்ட திட்டமிடல், காணி பயன்பாடு மற்றும் திட்டமிடல் பிரிவு, மாவட்ட தொழிற்பயிற்சி மையம் , மாவட்ட விவசாய பிரிவும் மேற்கொண்டுவருதல்.

➢ **பொதுமக்களைப் பாதுகாத்தல் , பொதுமக்களுக்கான அத்தியாவசிய சேவைகளை வழங்குதல்**.

அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து மாவட்டத்தில் ஏற்படும் அனர்த்தங்களில் (வெள்ளப்பெருக்கு, சூறாவளி, அடைமழை, வறட்சி) இருந்து பொதுமக்களைப் பாதுகாத்தல்

➢ **மாவட்டத்திலுள்ள அனைத்துப் புள்ளிவிபரங்களை திரட்டுதலும் பேணுதலும்**

இவை மாவட்ட புள்ளிவிபரக்கிளையினால் மேற்கொள்ளப்படுகிறது.

➢ **மாவட்டத்திலுள்ள பிரதேச , கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான திட்டமிடலும் ஒழுங்குபடுத்தலும்**

- வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன, மின்சார வசதிகள் ஒழுங்கமைத்தல்
- பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டின் மூலம் கிடைக்கும் நிதியில் மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் , மேற்பார்வை செய்தலும்.
- தற்பொழுது அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும்
  (திவிநெகும, கமநெகும, மகநெகும)
- வீடமைப்பதற்கான உதவி வழங்கல்
- யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களிற்கான இழப்பீட்டுத்தொகை வழங்குதல்

## 3. மாவட்டத்தின் அறிமுகம்

யாழ் மாவட்டத்துடன் இணைந்திருந்த கிளிநொச்சி பிரதேசம் புதிய மாவட்டமாக 1984ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ம் திகதி உருவாக்கப்பட்டது. இதன் எல்லைகளாவன.

வடக்கு - யாழ் மாவட்டம்.
கிழக்கும் தெற்கும் - முல்லைத்தீவு மாவட்டம்.
மேற்கும் தெற்கும் - மன்னார் மாவட்டம்.

வரலாற்றுப் பெருமைகள் வாய்ந்த உருத்திரபுரம் சிவன் கோயில், புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம், மண்ணித்தலை புனித அந்தோனியார் தேவாலயம், பாலைதீவு புனித அந்தோனியார் தேவாலயம், பொன்னாவெளி சிவன் ஆலயம், பூநகரி ஒல்லாந்தர் கோட்டை ஆகியன குறிப்பிடத்தக்கது. இயற்கை வளங்களான இரணைமடுக்குளம், சுண்டிக்குளம், பறவைகள் சரணாலயம், கௌதாரிமுனை கடற்கரை ஆகியன அமைந்துள்ளன.

இம்மாவட்டத்தின் பிரதான தொழில் விவசாயமாக அமைந்துள்ளது. பெரும்பாலானோர் நெற்செய்கையில் ஈடுபடுவதுடன், ஏனையவர்கள் உப உணவு உற்பத்திகள், பழமரச் செய்கை, மாடு, ஆடு, கோழி வளர்ப்பு போன்ற தொழில்களில் ஈடுபடுகின்றனர். அத்துடன் மீன்பிடித்தொழில் இரண்டாவது இடத்தைப்பிடித்து இம்மக்களின் ஜீவனோபாயத்திற்கு உதவுகின்றது.

இரணைமடுக்குளம் உட்பட எட்டு பெரிய நீர்ப்பாசனக்குளங்களும் 312 சிறிய நீர்ப்பாசனக்குளங்களும் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது. இத்துடன் மானாவாரியாகவும் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றார்கள்.

அண்மைய யுத்தத்தினால் முழுமையாக இடம்பெயர்ந்த இம் மாவட்டத்தின் மக்களுக்கான மீள்குடியேற்றம் 2009 கார்த்திகை மாதத்திலிருந்து ஆரம்பமானது. தற்போது மீள்குடியேற்றம் புறக்கணிக்கத்தக்கதான தொகையினரை விட முழுமை பெற்றுவிட்டதெனலாம். 31.12.2013 இல் உள்ளவாறான சனத்தொகைப்புள்ளிவிபரம் வருமாறு.

| பிரதேச செயலகப் பிரிவு | ஆண் | பெண் | மொத்தச் சனத்தொகை |
|---|---|---|---|
| கரைச்சி | 33978 | 36454 | 70432 |
| கண்டாவளை | 11816 | 12725 | 24541 |
| பூநகரி | 12064 | 12405 | 24469 |
| பச்சிலைப்பள்ளி | 5849 | 6171 | 12020 |
| மொத்தம் | 63707 | 67755 | 131462 |

இம் மாவட்டத்தின் சராசரி மழைவீழ்ச்சி 1520.57 மில்லி மீற்றர் ஆகும். 75 வீதம் மழைவீழ்ச்சி செப்ரம்பர் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையில் வடகிழக்கு பருவப் பெயர்ச்சிக் காற்றினால் கிடைக்கிறது. வெப்ப காலமாக

யூன் தொடக்கம் ஆகஸ்ட் வரையும் கருதப்படுகின்றது. மாதாந்த சராசரி வெப்பநிலை 25 தொடக்கம் 30 பாகை செல்சியஸ் ஆகும்.

### 3.1. மாவட்டத்தின் நிர்வாக வரைபடம்

**மாவட்ட நிர்வாக வரைபடம்**



## 3.2. மாவட்டத்தினுடைய அடிப்படைப் புள்ளிவிபரத் தகவல்கள்

| | |
|---|---|
| மாவட்டத்தின் பெயர் | கிளிநொச்சி |
| மாகாணம் | வடமாகாணம் |
| முழு இட விஸ்தீரணம் | 1237.11 சதுர கி.மீ |
| பிரதேச செயலக பிரிவுகளின் எண்ணிக்கை | 04 |
| கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை | 95 |
| கிராமங்களின் எண்ணிக்கை | 354 |
| வாக்கெடுப்பு பிரிவுகளின் எண்ணிக்கை | 95 |
| மாநகர சபைகளின் எண்ணிக்கை | -- |
| நகர சபைகளின் எண்ணிக்கை | -- |
| பிரதேச சபைகளின் எண்ணிக்கை | 03 |
| அமைச்சின், மாவட்டச் செயலரின் கீழ் இயங்கும் , அரச விடுதிகளின் எண்ணிக்கை | 16 |
| வலயக்கல்விப்பணிப்பாளர்களின் எண்ணிக்கை | 01 |
| பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை | 108/1702 |
| பாராளுமன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 09 |
| மாகாணசபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 04 |
| உள்ளூர் அதிகாரசபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 37 |
| குடித்தொகை | 131462 |

# 4. நிறுவன கட்டமைப்பும் அனுமதிக்கப்பட்ட ஆளணியும்

## 4.1. நிறுவன அமைப்பு வரைபடம்



## 4.2. அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரம்
## மாவட்ட செயலகம் (கருத்திட்டம் - 1)

| தொ. இல | பதவி | சேவை | தரம்/ வகுப்பு | அனுமதித்த ஆளணி | தற்போதைய ஆளணி | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் (அ) | | | | | | |
| 1 | அரசாங்க அதிபர் | இ.நி.சே | விசேட | 1 | 1 | 0 |
| 2 | மேலதிக அரசாங்க அதிபர் | இ.நி.சே | I | 1 | 1 | 0 |
| 3 | உதவி மாவட்டச் செயலாளர் | இ.நி.சே | III | 1 | 1 | 0 |
| 4 | பிரதம கணக்காளர் | இ.க.சே | I | 1 | 1 | 0 |
| 5 | பிரதம உள்ளக கணக்காய்வாளர் | இ.க.சே | I | 1 | 1 | 0 |
| 6 | கணக்காளர் | இ.க.சே | III | 1 | 1 | 0 |
| 7 | பொறியியலாளர் | இ.பொ.சே | III | 1 | 1 | 0 |
| **3ம் நிலை மட்டம் (ஆ)** | | | | | | |
| 8 | நிர்வாக உத்தியோகத்தர் | பொ.மு.உ.சே | அ.வி.த | 1 | 1 | 0 |
| 9 | மொழி பெயர்ப்பாளர் | மொ.சே | I | 1 | 0 | 1 |
| **2ம் நிலை மட்டம் (இ)** | | | | | 0 | |
| 10 | அபிவிருத்தி இணைப்பாளர் | பட்டதாரி | | 2 | 0 | 2 |
| 11 | பாதீட்டு உதவியாளர் | பட்டதாரி | | 1 | 1 | 0 |
| 12 | பொது முகாமைத்துவ உதவியாளர் | பொ.மு.உ.சே | I,II,III | 34 | 33 | 1 |
| 13 | தொழில்நுட்ப அலுவலர் | இ.தொ.சே | II ஆ | 1 | 0 | 1 |
| 14 | பட வரைஞர் | இ.தொ.சே | II ஆ | 1 | 0 | 1 |
| 15 | வரவேற்பாளர் | | | 1 | 1 | 0 |
| **1ம் நிலை மட்டம் (ஈ)** | | | | | | |
| 16 | சாரதி | சா.சே | IIஆ,IIஅ,I | 6 | 5 | 1 |
| 17 | அலுவலக உதவியாளர் | அ.ப.சே | I,II,III | 15 | 10 | 5 |
| 18 | காவலாளி | காவலாளி | | 2 | 2 | 0 |
| | **மொத்தம்** | | | **72** | **60** | **12** |

## 4.2. பிரதேச செயலகங்கள் (கருத்திட்டம் - 2)

| தொ. இல | பதவி | சேவை | தரம்/ வகுப்பு | அனுமதித் த ஆளணி | தற்போதைய ஆளணி | வெற் றிடம் |
|---|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் (அ) | | | | | | |
| 1 | பிரதேச செயலர் | இ.நி.சே | I | 4 | பதில் கடமை 4 இ.நி.சே III | 0 |
| 2 | உதவி பிரதேச செயலர் | இ.நி.சே | III | 4 | 0 | 4 |
| 3 | கணக்காளர் | இ.க.சே | III | 4 | 4 | 0 |
| 3ம் நிலை மட்டம் (ஆ) | | | | | | |
| 4 | நிர்வாக உத்தியோகத்தர் | பொ.மு.உ. சே | அ.வி.த | 4 | 3 பதில்கடமை | 1 |
| 5 | நிர்வாக கிராம அலுவலர் | கி.அ.சே | அ.வி.த | 4 | 0 | 4 |
| 6 | மொழி பெயர்ப்பாளர் | மொ.சே | | 4 | 0 | 4 |
| 2ம் நிலை மட்டம் (இ) | | | | | | |
| 7 | பாதீட்டு உதவியாளர் | பட்டதாரி | | 4 | 0 | 4 |
| 8 | அபிவிருத்தி இணைப்பாளர் | பட்டதாரி | | 4 | 0 | 4 |
| 9 | பொது முகாமைத்துவ உதவியாளர் | பொ.மு.உ. சே | I,II,III | 150 | 52 | 98 |
| 10 | கிராம அலுவலர் | கி.அ.சே | II,III | 95 | 51 | 44 |
| 11 | தொழில்நுட்ப அலுவலர் | இ.தொநு.சே | | 4 | 0 | 4 |
| 12 | பட வரைஞர் | தொ.நு.சே | II ஆ | 4 | 0 | 4 |
| 1ம் நிலை மட்டம் (ஈ) | | | | | | |
| 13 | ஆவண காப்பாளர் | அ.ப.சே | I,II,III | 4 | 0 | 4 |
| 14 | சாரதி | சா.சே | IIஆ,IIஅ,I | 12 | 9 | 3 |
| 15 | தொலைபேசி இயக்குனர் | அ.ப.சே | I | 4 | 0 | 4 |
| 16 | காவலாளி | அ.ப.சே | II | 12 | 3 | 9 |
| 17 | அலுவலக பணியாளர் | அ.ப.சே | III | 33 | 19 | 14 |
| 18 | சுத்திகரிப்பாளர் | அ.ப.சே | II | 4 | 2 | 2 |
| 19 | தோட்ட பராமரிப்பாளர் | அ.ப.சே | II | 4 | 0 | 4 |
| 20 | புத்தக கட்டுனர் | அ.ப.சே | I | 4 | 1 | 3 |
| | **மொத்தம்** | | | **362** | **148** | **214** |

# 5. செயலாற்றுகை

## 5.1 பொது நிர்வாக செயற்பாடுகள்

**(அ)** இம்மாவட்டத்தில் உள்ள பல்வேறு அமைச்சுக்களின் திணைக்களங்களிலும் பட்டதாரி பயிலுனர்களாக 2012இல் நியமனம்பெற்ற 395 பட்டதாரிகளையும் 2013.07.02ம் திகதி தொடக்கம் அபிவிருத்தி உத்தியோத்தர்களாக பொது நிர்வாக அமைச்சினால் நிரந்தரமாக்கப்பட்டு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. நியமனம் பெற்றவர்களின் விபரம் வருமாறு

மாவட்டச் செயலகம், ஏனைய திணைக்களங்கள் - 127
பிரதேச செயலகம், கரைச்சி - 87
பிரதேச செயலகம், கண்டாவளை - 55
பிரதேச செயலகம், பூநகரி - 65
பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி - 61

**(ஆ)** புதிய மாவட்டச் செயலகக் கட்டடத்தொகுதி பகுதி 1 கெயார் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு 2014ம்ஆண்டு பூர்த்தியாகும் நிலையில் உள்ளது.

### (இ) உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு குழுவானது இவ் வருடத்திற்குரிய வருடாந்த திட்டமிடலை மேற்கொண்டு அதற்கு ஏற்றவாறு தமது நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளது. இவ்வாண்டில் பதின்நான்கு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அவற்றின் பிரதி மாவட்டச் செயலகம், மாவட்ட திட்டமிடல் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிற்கும் அனுப்பப்பட்டுள்ளன. அத்துடன் இவ்வாண்டில் மூன்று முகாமைத்துவ கணக்காய்வுக் குழு கூட்டம் நடாத்தப்பட்டு உள்ளகக் கணக்காய்வு மூலம் இனங்காணப்பட்ட விடயங்கள், அரசாங்க கணக்காய்வு திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட ஐயவினா தொடர்பான விடயங்கள், அதற்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டன.

பிரதேச செயலகத்திற்கு கள விஜயத்தினை மேற்கொண்டு கணக்குக் கிளை, நிர்வாகக் கிளை, திட்டமிடல் கிளை, சமூக சேவைகள் கிளை, மேலதிக மாவட்ட பிறப்பு, இறப்பு விவாக பதிவாளர் கிளை என்பன பார்வையிடப்படுகின்றது. கணக்குக் கிளையில் கொடுப்பனவு உறுதிச் சீட்டு.கொடுப்பனவை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், பற்றுச் சீட்டு, காசோலை, இருப்புடன் தொடர்புடைய ஆவணங்கள், கடன் சம்பந்தமான ஆவணங்கள், வாகன ஓட்டப் பதிவேடு தொடர்பான ஆவணங்கள், சம்பளம் தொடர்பான ஆவணங்கள், வாக்குப் பண பதிவேடு, பொது வைப்புப் பதிவேடு போன்ற ஆவணங்களுடன் கணக்குக் கிளையுடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் பார்வையிடப்படுகின்றது. நிர்வாக கிளையில் நிர்வாக கிளையுடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் கணக்காய்வு செய்யப்படுகின்றது. திட்டமிடல் கிளையில் கொடுப்பனவு உறுதிச் சீட்டு, கொடுப்பனவை

உறுதிப்படுத்தும் ஆவணங்கள், பற்றுச்சீட்டு, திட்டமிடல் கிளையில் செயற்திட்டங்கள் தொடர்பான ஆவணங்கள் மற்றும் அனைத்து ஆவணங்களும் கணக்காய்வு செய்யப்படுகின்றது. சமூக சேவை அமைப்பினால் வழங்கப்படுகின்ற உதவிகள் என்ன அடிப்படையில் எவ்வாறானவர்களிற்கு வழங்கப்படுகினறது. அவ்வாறான உதவிகள் உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்களிற்கு கிடைக்கின்றதா, பயனாளிகளின் விபரம் என்பவற்றுடன் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் பரிசீலனை செய்யப்படுகின்றது.

பிறப்பு, இறப்பு, விவாக பதிவு தொடர்பாக பயன்படுத்தப்படுகின்ற ஆவணங்கள் கணக்காய்வு செய்யப்பட்டு அவை தொடர்பாக கிடைக்கப்பெறும் காசுப் பெறுவனவுகள் அன்றைய தினமே வங்கியில் வைப்புச் செய்யப்படுகின்றதா என்று கணக்காய்வு செய்யப்படுகின்றது.

முன்பள்ளி சிறுவர்களுக்கு வழங்கப்படுகின்ற பால் விநியோகம் தொடர்பான ஆவணங்கள் கணக்காய்வு செய்யப்பட்டு ஒவ்வொரு முன்பள்ளிகளிற்கும் சென்று முன்பள்ளி சிறுவர்களிற்கு வழங்கப்படுகின்ற பாலின் அளவு உறுதிப்படுத்தப்படுகின்றது.

கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களத்தின் வழிகாட்டலுடன் உள்ளகக் கணக்காய்வாளர்களினால் சமுர்த்தி அதிகார சபையின் 2012ம் ஆண்டிற்கான வருடாந்த இருப்பு கணக்கெடுப்பு, மாவட்ட செயலகம், மற்றும் நான்கு பிரதேச செயலகங்களின் கீழ் இயங்கி வரும் சமுர்த்தி பிரதான காரியாலயம், சமுர்த்தி வங்கிக் கிளைகள், மகாசங்கம் போன்றவற்றில் கணக்காய்வு செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

## ஈ) மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

2013 ஆம் ஆண்டு எமது திணைக்கள மாவட்டக்கிளையினால் மக்களிற்கு வழங்கப்பட்டசேவைகளும் செயற்பாடுகளும்

01.எம்மால் பெற்றுக்கொள்ளப்பட்ட சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பங்கள் விபரம்

| | | |
|---|---|---|
| புதிய விண்ணப்பங்கள் | - | 4140 |
| பார வாகன நீடிப்புக்கள் | - | 130 |
| இலகு வாகன நீடிப்புக்கள் | - | 220 |

மொத்தமாக 4490 விண்ணப்ப படிவங்கள் பெறப்பட்டுள்ளன.

02. எம்மால் நடாத்தப்பட்ட எழுத்துப்பரீட்சை தொடர்பான விபரங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| எழுத்துப்பரீட்சைக்கு முதன்முறையாக தோற்றியோர் | - | 4270 |
| எழுத்துப்பரீட்சைக்கு 02ஆம் 03ஆம் 04ஆம் முறை தோற்றியோர் | - | 2100 |

இவ்வாறு எழுத்துப்பரீட்சையில் தோற்றியோரில் 3915 பேர் செயன்முறைப்பரீட்சையில் தோற்றுவதற்கான தகுதியினை பெற்றுக்கொண்டனர்.

03. செயன்முறைப்பரீட்சை தொடர்பான விபரங்கள்

2013 ஆம் ஆண்டு செயன்முறைப்பரீட்சைக்கு தகுதி பெற்றவர்களும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் தகுதி பெற்றவர்களுமாக 2013 ஆம் ஆண்டில் 3981 பேர் செயன்முறைப்பரீட்சையில் தோற்றி தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டார்கள்.

04. தொலைந்த வாகன பதிவு புத்தகங்களை பெற்றுக்கொள்வதற்காகவும் மற்றும் ஏனைய தேவைகளிற்காகவும் 236 வாகனங்கள் பரீட்சிக்கப்பட்டு வாகன பரீட்சிப்பு சான்றிதழ்கள் உரியவர்களிற்கு வழங்கப்பட்டன.

05. வாகன நிறைச்சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய பல்வேறு தேவைகளிற்காக 18 பேரினது வாகனங்களுக்கு 18 நிறைச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

06. 2013 ஆம் ஆண்டில் எமது மாவட்டக்கிளை ஊடாக 553 பேரிற்கு அவர்களிற்குரிய வாகனங்களிற்கான இலக்கத்தகடுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

## உ) பயிற்சி வகுப்புக்கள்

மாவட்டச் செயலக ஒதுக்கீட்டின் கீழ் எமது மாவட்டத்தில் பயிலுனர்களாக நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்குரிய ஆரம்ப பயிற்சியும், பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கும், முகாமைத்துவ உதவியாளர்களுக்கும் பெறுகை நடைமுறை தொடர்பான பயிற்சியும், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு காசோலை, அடியிதழ்சேர் புத்தகங்கள், சிகாஸ் தொடர்பான பயிற்சிகளும் எம்மால் நடாத்தப்பட்டுள்ளன.

## ஊ) தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு

### 1. சமூக ஒருமைப்பாடும் கல்வியும்

- சமூக ஒருமைப்பாட்டு வாரத்தினை முன்னிட்டு சமூக ஒருமைப்பாட்டிற்கான கல்வி எனும் தொனிப்பொருளில் 5ம் தர புலமை பரிசில் மாணவர்களுக்கான பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு 2013 ஆடி மாதம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மாணவர்களுக்கு பளை மத்திய கல்லூரியிலும், கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும், பூநகரி மகாவித்தியாலயத்தில் பூநகரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கருத்தரங்கு நடாத்தப்பட்டது மொத்தம் 501 வறிய மாணவர்கள் பயனடைந்தனர். இவர்களுக்கு 500 மாணவர்களுக்கான

மும்மொழிப் புத்தகங்கள், கையேடுகள், கோப்புக்கள், பேனை போன்றன வழங்கப்பட்டன.

- கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஆனைவிழுந்தான் கிராம சேவகர் பிரிவில் உள்ள முன்பள்ளி திருத்த வேலைகள் மக்கள் பங்குபற்றலுடன் பூர்த்திசெய்யப்பட்டது.

## 2. சிறுவர் மேம்பாட்டு நிகழ்ச்சி

- ஆனி மாதம் கரைச்சி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பெற்றோர்களை இழந்த மற்றும் தாய் அல்லது தந்தையை இழந்த மாணவர்கள் 150 பேருக்கு பாடசாலை பை மற்றும் உபகரணப் பொதியும் வழங்கப்பட்டன.

## 3. சட்ட ஆலோசனை மற்றும் சட்ட உதவி

- சட்ட ஆலோசனை மற்றும் சட்ட உதவியைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடமாடும் சேவை 2013 ஆடி மாதம் கரைச்சிப் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் தெற்கு, உருத்திரபுரம் கிழக்கு கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய மக்களும், சிஎஸ்டி அங்கத்தவர்களுமாக 153 பேர் கலந்து கொண்டனர். இவர்களுக்கு அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ், காணி உறுதி என்பன பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகளும், மற்றும் சட்டத்திற்கு முரணான செயற்பாடுகள், விளைவுகள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

## 4. சட்ட ஆவணங்கள் தொடர்பான பகுப்பாய்வு

- சட்ட ஆவணங்களின் தேவைப்பாடு தொடர்பான கணிப்பாய்வு கரைச்சி பிரதேச செயலகத்தில் 07.06.2013 - 16.06.2013 வரை செய்யப்பட்டன. கல்மடுநகர் கோணாவில் ஆகிய இரு கிராம சேவகர் பிரிவுகளில் 2028 குடும்பங்களிலிருந்து தரவுகள் பெறப்பட்டன.

- சட்ட ஆவணங்களின் தேவைப்பாடு தொடர்பான கணிப்பாய்வு கண்டாவளை பிரதேச செயலகத்தில் 07.06.2013 – 14.06.2013 வரை செய்யப்பட்டன. கல்மடுநகர், புன்னைநீராவி ஆகிய இரு கிராமசேவகர் பிரிவுகளில் 2393 குடும்பங்களிலிருந்து தரவுகள் பெறப்பட்டன.

- சட்ட ஆவணங்களின் தேவைப்பாடு தொடர்பான கணிப்பாய்வு பூநகரி பிரதேச செயலகத்தில் 07.06.2013 - 13.06.2013 வரை செய்யப்பட்டன. பள்ளிக்குடா கிராம சேவகர் பிரிவில் 796 குடும்பங்களிலிருந்தும் நாச்சிக்குடா கிராம சேவகர் பிரிவில் 885 குடும்பங்களிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டன.

## 5. நடமாடும் சேவைகள்

| திகதி | பிரதேச செயலகப்பிரிவு | கிராம சேவகர் பிரிவு | பிறப்புச்சான்றிதழ் | இறப்புச்சான்றிதழ் | திருமண பதிவுச் சான்றிதழ் | திருமண விண்ணப்பம் | திருமணப்பதிவு | காலங்கடந்த பிறப்பு | காலங்கடந்த இறப்பு | திருத்தங்கள் | முதியோர் அடையாள அட்டை | தேசிய அடையாள அட்டை | சமாதான நீதவான் அறிக்கை | பொலிஸ் அறிக்கை | சட்ட உதவி ஆலோசனை | ஆயுள் வேத சிகிச்சை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2013.11.18 | கரைச்சி | மாயவனூர் வட்டக்கச்சி | 212 | 04 | 27 | | | 01 | | | 10 | 14 | 32 | 04 | | | 304 |
| 2013.11.19 | கரைச்சி | அக்கராயன் ஸ்கந்தபுரம் | 291 | 11 | 48 | | | 02 | | 08 | 25 | 30 | 30 | 16 | 20 | | 481 |
| 2013.11.21 | கரைச்சி | ஆனைவிழுந்தான் வன்னேரிக்குளம் | 384 | 21 | 62 | 05 | | | | 02 | 21 | 20 | 40 | 12 | 20 | | 587 |
| 2013.11.22 | பூநகரி | முழங்காவில் நாச்சிக்குடா | 373 | 19 | 66 | 15 | | | | | 11 | 04 | 23 | 08 | 25 | | 544 |
| 2013.11.23 | பூநகரி | ஜெயபுரம் வடக்கு பல்லவராயன் வடக்கு | 249 | 10 | 43 | | | 12 | | 09 | 26 | 08 | 25 | | 35 | | 417 |
| 2013.11.25 | கண்டாவளை | ஊரியான் கோரக்கன்கட்டு | 160 | 08 | 38 | | | 40 | | 05 | 04 | 16 | 10 | 16 | 16 | | 313 |
| 2013.11.26 | கண்டாவளை | புன்னைநீராவி | 237 | 08 | 55 | | | | | | 06 | 28 | 26 | 08 | 28 | | 396 |
| 2013.11.28 | கண்டாவளை | தர்மபுரம் கிழக்கு கல்மடுநகர் | 375 | 28 | 80 | | | 58 | | | 10 | 30 | 40 | 31 | 15 | | 667 |
| 2013.11.29 | கண்டாவளை | கிராஞ்சி | 415 | 16 | 46 | 08 | | 70 | | | 24 | 35 | 17 | 02 | 17 | | 650 |
| 2013.12.13 | பூநகரி | 19 பிரிவும் | 417 | | | | | | | | 58 | 106 | 08 | 11 | 28 | 39 | 667 |
| 2013.12.14 | கரைச்சி | 42 கிராம அலுவலர் பிரிவு | 1278 | | | | 24 | 209 | | | 75 | 246 | 150 | 72 | 50 | 61 | 2165 |
| 2013.12.15 | கண்டாவளை | 16 கிராம அலுவலர் பிரிவு | 320 | | | | 27 | 23 | | | 14 | 164 | 156 | 21 | 28 | 63 | 816 |

6. **மக்கள் பங்குபற்றலுடனான சிரமதானப் பணிகள்**

- கிருஸ்ணபுரம் இராமகிருஸ்ணர் வித்தியாலயத்தின் கிருஸ்ணபுரம் விநாயகர் மொழிச்சங்க அங்கத்தவர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 72 பேரின் பங்குபற்றுகையுடன் இடம்பெற்றது. இதன் மூலம் இராமகிருஸ்ணர் வித்தியாலயத்தின் பாடசாலைக் கட்டடத்தின் ஒரு பகுதி கூரை தென்னோலையால் வேயப்பட்டு, கிணறு இறைக்கப்பட்டு, பாடசாலையின் சுற்றுப்புற வேலிகள் அடைக்கப்பட்டமை.
- புதுமுறிப்பு மொழிச்சங்க அங்கத்தவர்கள், கிராம சேவகர் உட்பட 50 பேர் கலந்து கொண்டனர். இவர்களினால் பொது நோக்கு மண்டபத்தின் சுற்றுச் சூழலில் காணப்பட்ட பற்றைக் காடுகளும், பொது மண்டபமும், சமுர்த்தி மண்டபமும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீளெழுச்சிக் கட்டடமும் துப்பரவு செய்யப்பட்டன.
- ஸ்கந்தபுர விளையாட்டு மைதானமானது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், மொழிச்சங்க அங்கத்தவர்கள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், சமுர்த்திப் பயனாளிகள், உட்பட 250 பேரின் ஒத்துழைப்புடன் சிரமதானப்பணி மைதானத்தின் சுற்றுச் சூழலில் இருந்த பற்றைக் காடுகள் துப்பரவு செய்யப்பட்டன.

7. **இனங்களுக்கிடையில் சகோதரத்துவத்தை கட்டியெழுப்புதல்**

- இலங்கை தேசத்தினுள் இனசகோதரத்துவத்தைக் கட்டியெழுப்புவோம் எனும் தொனிப் பொருளில் விவசாய உரிமைகளை பாதுகாக்கும் தேசிய இயக்கம் கண்காணிப்பு மற்றும் கற்கைச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டிருந்தது. உமையாள்புர அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
- தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கௌரவ அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அவர்களின் சமூக ஒருமைப்பாடு தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் 2013ம் ஆண்டு மாசி மாதம் இடம்பெற்றது.

8. **மொழிகள் தொடர்பான செயற்றிட்டங்கள்**

- தேசிய மொழிச்சங்க மக்கள் இயக்க செயற்பாட்டின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 62 மொழிச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டது. இவற்றில் சிலவற்றில் பொதுமக்களுக்கான மொழிவகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

- கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திற்கு 2013 ஆவணி மாததிலும் மாசி கரைச்சி, பச்சிலைபள்ளி பிரதேச செயலகத்தில் இரண்டாம் மொழி சிங்களம் III, II பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டது.
- 2013ம் ஆண்டு கார்த்திகை மாதம் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும் வடக்கு மாகாண சபையின் ஆளணிப்பயிற்சி அலுவலகமும் இணைந்து 12 நாட்கள் கொண்ட சிங்கள

மொழிப்பயிற்சி நெறியானது மாவட்ட செயலக ஊழியர்களுக்கும், ஏனைய அரச திணைக்கள ஊழியர்களுக்குமாக மொத்தம் 108 பேருக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் 2013.11.18 தொடக்கம் 2013.11.29 வரை நடாத்தப்பட்டது.

- சித்திரை மாதம் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்புக்களைக் கையளித்தல் மாவட்டச் செயலகத்தின் அனைத்துத் திணைக்கள உத்தியோகத்தர்களிடமும் கையளிக்கப்பட்டது.

- பங்குனி மாதத்தில் வழிநோக்குக்கான அடிப்படைத் தரவு சேகரிப்பு மாவட்டச் செயலகத்தின் அரச கருமமொழிக்கொள்கை அமுலாக்கத்திற்கான வழிநோக்கு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது.

- 2013 மார்ச் மாதத்தில் அலுவலர்கள் உபயோகிக்கும் வாகனங்களில் பதவிப் பெயர்ப்பலகைகள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட வேண்டிய அவசியம் பற்றி அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் மற்றும் ஏனைய அரச திணைக்களங்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

- 2013 ஆவணி மாதம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் ரோஜா மொழிச் சங்கத்தின் மொழிக் கற்கை நெறியானது ஆரம்பிக்கப்பட்டது. சிங்கள மொழிப்பயிற்சியில் 50 மாணவர் பயனடைகின்றனர்.

- 2013 ஆடி இல் சிங்கள மொழியில் மாத்திரம் சொற்தொடர்களைப் பயன்படுத்தும் அரச வேலைத் திட்டங்கள் மற்றும் கருத்திட்ட அறிமுகங்களின் போது தமிழ் ஆங்கில மொழி சொற்தொடர்களையும் பிரயோகிப்பது அவசியமாகும் என்பது பற்றி சகல திணைக்கள தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டது

## 9. மாகாண மொழிப்பயிற்சி நிலையம்

- தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சின் மாகாண மொழிப்பயிற்சி நிலையத்திற்கான பெயர்ப்பலகை மாசியில் நாட்டப்பட்டு சித்திரை மாதம் நிலஅளவை செய்யப்பட்டு ஆவணி மாதத்தில் உரிமம் பெறுவதற்காக அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## ஏ) தேர்தல்கள் திணைக்களம்

2013ம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்புத் திருத்தப்பணிகள் 2013 ஜுன் 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. அனைத்துப் பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர்களிற்கான மீளாய்வு அறிவுறுத்தற் கூட்டங்கள் நடாத்தப்பட்டு மீளாய்விற்குரிய படிவங்கள் விநியோகிக்கப்பட்டன. ஒக்டோபர் மாத இறுதிக்கு முன்னர் சகலரும் பதிவுகளை கிராம அலுவலர்களினூடாக உறுதிசெய்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டது.

இதற்காக ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகத்திலும் பொதுமக்கள் பார்வைக்காக 2012ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பு ஜுன் 01ம் திகதி பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் ஓகஸ்ட் மாதத்தில் அந்தந்த கிராம அலுவலர்களினால் நேரடியாக தேர்தல்கள் அலுவலகத்தில் சமூகமளித்து செவ்வை பார்த்து ஒப்படைக்கப்பட்டன.

மேற்படி மீளாய்வின் போது பெறப்பட்ட விபரங்கள் மூலம் கிளிநொச்சி மாவட்ட தேருநர் இடாப்புக்களின் 2013ம் ஆண்டிற்குரிய கணனி மயப்படுத்தப்பட்ட 'ஏ' நிரல்கள் மற்றும் 'பீ' நிரல்களினதும் பட்டியல் தயாரிக்கப்பட்டு மேற்படி பட்டியல் 2013.10.02 முதல் 2013.10.30ம் திகதி வரை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இக்காலப்பகுதிக்குள் பெறப்பட்ட ஆட்சேபனைகள், உரிமைக்கோரிக்கைகள் திருத்தங்களோடு 2013ம் ஆண்டு வாக்காளர் இடாப்பு பணிகள் யாவும் 2013 டிசெம்பர் மாதத்தில் நிறைவு செய்யப்பட்டன.

2013ம் ஆண்டிற்கான தேருநர் இடாப்புக்கள் 2013.12.31ம் திகதி உறுதிப்படுத்தப்பட்டது. 2013ம் ஆண்டின்படி மொத்த வாக்காளர் தொகை 75465 ஆகும்.

கிராம அலுவலர்களுக்குரிய கொடுப்பனவுகள் யாவும் யாழ் தேர்தல்கள் அலுவலகத்தினால் செய்யப்பட்டது.

கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்தினால் 3607 பிரித்தெடுப்புப் பிரதிகள் 2013 இல் வழங்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக வடக்கு மாகாணசபைத் தேர்தல்கள் - 2013 தொடர்பான நடவடிக்கைகள் கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டது. இத் தேர்தலில் 2013.07.25 இலிருந்து 2013.08.01 வரை வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படும் காலமாக அறிவிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் 11 கட்சி, 03 சுயேட்சை வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அதில் 11 கட்சி, 02 சுயேட்சை வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இத்தேர்தலுக்கான தபால் மூலமான வாக்களிப்பதற்காக 970 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு 2013.09.09 மற்றும் 2013.09.10 ஆகிய திகதிகளில் தபால்மூல வாக்களிப்புக்கள் நடைபெற்றது. தொடர்ந்து 2013.09.21 அன்று வடக்கு மாகாணசபைத் தேர்தல்கள் - 2013 நடாத்தப்பட்டது. இத்தேர்தலுக்கு 68600 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

**2013ம் ஆண்டு வாக்காளர் விபரம்**

| | | |
|---|---|---|
| **கரைச்சி** | -------- | 38333 |
| **கண்டாவளை** | -------- | 15162 |
| **பூநகரி** | -------- | 13268 |
| **பச்சிலைப்பள்ளி** | -------- | 8702 |
| **மொத்தம்** | | **75465** |

## ஏ) தேசிய அடையாள அட்டை வழங்குவது தொடர்பான வேலைகள்.

கரைச்சி பிரதேச செயலகத்தில் அடையாள அட்டைக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 4130 ஆகும். இதில் கிடைக்கப்பெற்ற அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 2639 ஆகும்.

கண்டாவளை பிரதேச செயலகத்தில் அடையாள அட்டைக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1432 ஆகும். இதில் கிடைக்கப்பெற்ற அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 887 ஆகும்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் அடையாள அட்டைக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 508 ஆகும். இதில் கிடைக்கப்பெற்ற அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 268 ஆகும்.

பூநகரி பிரதேச செயலகத்தில் அடையாள அட்டைக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1248 ஆகும். இதில் கிடைக்கப்பெற்ற அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 1093 ஆகும்.

## ஒ) காணி மாவட்டப் பதிவாளர் திணைக்களம்

| இல | விபரம் | எண்ணிக்கை | முத்திரைப் பெறுமதி |
|---|---|---|---|
| 01 | வருடத்தில் பதிவு செய்யப்பட்ட உறுதிகள் | 1780 | 175700.00 |
| | வருடத்தில் பதிவு செய்யப்பட்ட அளிப்புகள் | 231 | |
| 02 | வருடத்தில் பெறப்பட்ட உறுதி இணைப்பிரதிகள் | 847 | |

| | | | |
|---|---|---|---|
| 03 | பிரதிகள் பெறுவதற்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் | | |
| | அ. காணிப்பதிவேட்டுத்தாள் | 253 | 31100.00 |
| | ஆ. உறுதிப்பிரதிகள் | 44 | 20400.00 |
| 04 | தேடுதல் விண்ணப்பம் காணிப்பதிவேடு | 03 | 1500.00 |
| 05 | இணைப்பிரதிகள் ஒட்டப்பட்ட முத்திரை கட்டணம் | | 3816266.50 |
| 06 | பதிவு செய்யப்பட்ட விவாகங்களின் எண்ணிக்கை | 1010 | |
| 07 | பதிவு செய்யப்பட்ட பிறப்புக்களின்; எண்ணிக்கை | 3063 | |
| 08 | பதிவு செய்யப்பட்ட இறப்புக்களின் எண்ணிக்கை | 401 | |
| 09 | அனுமதிக்கப்பட்ட திருத்த பிரதிக்கினைகளின் எண்ணிக்கை | 984 | |
| 10 | வழங்கப்பட்ட அனுமான வயது சான்றிதழ் | 56 | |
| 11 | பதிவு செய்யப்பட்ட காலம்கடந்த பிறப்பு | 767 | |
| 12 | பதிவு செய்யப்பட்ட காலம்கடந்த இறப்பு | 36 | |
| 13 | விவாக பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் மற்றும் அனுமான வயது சான்றிதழ்களின் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்காக பெற்ற விண்ணப்பங்கள் | அ 26124<br>ஆ 7167 | 3340700.00<br>1431900.00 |
| 14 | வழங்கப்பட்ட பிரதிகள் | அ 26862<br>ஆ 3699 | |

* கரைச்சி, பளை,, கண்டாவளை ஆகிய பிரதேச செயலகங்களில் பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்கள் கணனிமயப்படுத்தப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

## ஓ) மாவட்ட புள்ளிவிபரக்கிளையின் செயற்பாடுகள்

இந்த நாட்டின் சமூக,, பொருளாதார நிலமைகள் சம்பந்தமான தரவுகளைச் சேகரித்தல், சீர்முறைப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல், வெளியிடல், புள்ளிவிபரக்குறிகாட்டிகளைக்கணித்தல் ஆகிய பொறுப்புக்கள் மத்திய அரசாங்கத்தின் முகவர் நிலையமான தொகைமதிப்பு புள்ளிவிபரத்தைச் சார்ந்தது.

புள்ளிவிபரக்கிளையினால் பொருளாதாரத் தொகைமதிப்பு நடவடிக்கைகளான, பெருந்தோட்டங்களை பட்டியலிடல், கைத்தொழில் வர்த்தகம் மற்றும் சேவை நிறுவனங்களை பட்டியலிடல், உள்நாட்டு யுத்தத்தினால் இறந்த காணாமற்போன காயமடைந்த மற்றும் சொத்து இழப்பு தொடர்பான தொகைமதிப்பு, சராசரி நெல்விளைச்சலை மதிப்பீடு செய்வதற்காக ஆண்டுக்கு இருமுறை நடாத்தப்படும் மாதிரி அளவீடுகள்,

இலங்கைத் தொழிற்பல அளவீடு, வருடாந்த கைத்தொழில் நிர்மான அளவீடு, நெற்புள்ளிவிபரங்கள், மேட்டுநிலப்பயிர்கள் மற்றும் கால்நடைப்புள்ளிவிபரங்கள், கட்டிடப்புள்ளிவிபரங்கள் போன்றனவும் சில்லறை விலைகளும் உற்பத்தியாளர் விலைகளும் 2013ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

## ஔ) அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள்

வெள்ள அனர்த்தத்தினால் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 563 குடும்பங்களை சேர்ந்த 2145 அங்கத்தவர்களும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 3930 குடும்பங்களை சேர்ந்த 14782 அங்கத்தவர்களும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 322 குடும்பங்களை சேர்ந்த 1228 அங்கத்தவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவற்றுள் 11 பாதுகாப்பான இடங்களில் 663 குடும்பங்களைச் சேர்ந்த 2302 அங்கத்தவர்களினை தங்க வைக்கப்பட்டு இவர்களுக்கான சமைத்த உணவுகளும் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினாலும், அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் வழங்கப்பட்டது. வெள்ள அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கும் நிவாரண உதவி வழங்குவதற்கும் 10,000,000/= அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்டது.

### அனர்த்த தடுப்பு செயற்பாடுகள்

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள புன்னைநீராவி கிராம சேவையாளர் பிரிவில் 3.78 மில்லியன் பெறுமதியான கழிவு வாய்க்கால் புனரமைக்கப்பட்டுள்ளது.




கழிவு
வாய்க்
கால்



## சுனாமி,வெள்ளம் போன்றவற்றிற்கான நெட்டுருப்பயிற்சி

சுனாமி, வெள்ள அனர்த்தம் போன்றவற்றிற்கான ஒத்திகை நிகழ்வு பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பொன்னகர், பள்ளிக்குடா, நாச்சிக்குடா ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலும் பளை பிரதேச செயலாளர் பிரிவில் அல்லிப்பளை, கிளாலி, கோவில்வயல், புலோப்பளை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பிரமந்தனாறு தட்டுவன்கொட்டி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலும் நடாத்தப்பட்டது.வெள்ள அனர்த்தத்திற்கான ஒத்திகை நிகழ்வு கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் பன்னங்கண்டி, சிவிக் சென்ரர் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலும் நடாத்தப்பட்டது.



வெள்ள அனர்த்த முகாமைத்துவ ஓத்திகை நிகழ்வு பன்னங்கண்டி





தேசிய சுனாமி ஓத்திகை நிகழ்வு வலைப்பாடு



## அனர்த்த தயார்படுத்துகை செயற்திட்டம்

பிரதேச செயலகங்கள் ரீதியாக முதலுதவி பயிற்சி நெறி, அனர்த்த விழிப்புணர்வுக் கருத்தமர்வுகளும் பிரதேச அனர்த்த முகாமைத்துவ திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

வேள்ட்விசன், ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் அனுசரணையுடனும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 07 கிராம சேவையாளர் பிரிவுகளில் அனர்த்த முகாமைத்துவ குழு

அங்கத்தவர்களுக்கான முதலுதவி, விழிப்புணர்வு, இடர்பாதிப்பு நிலை, பகுப்பாய்வு, தொடர்பாடல் பயிற்சி நெறிகளும் வழங்கப்பட்டுள்ளன.



முதலுதவி பயிற்சி



கிராம மட்ட வரைபடம் தயாரித்தல்



**கிராம மக்களுடனான கலந்துரையாடல்**



**விழிப்புணர்வு கருத்தமர்வு**

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழு அங்கத்தவர்களுக்கான 3 நாள் வதிவிடப் பயிற்சி நெறி கபறண உல்லாச விடுதியில் நடாத்தப்பட்டது.





சர்வதேச அனர்த்த குறைப்பு தினமான ஒக்ரோபர் 13ந் திகதி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் கொண்டாடப்பட்டது. இந் நிகழ்வில் அனர்த்தக் குறைப்பு தொடர்பான மேடை நாடகம் வேள்ட்விசன் நிறுவனத்தின் அனுசரனையுடன் அரங்கேற்றம் செய்யப்பட்டது. வரட்சிகால குடிநீர் வழங்குவதற்காக வேள்விசன் நிறுவனத்தினால் அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கு வழங்கப்பட்ட பாரவூர்தி குடிநீர் தாங்கியினை மாவட்ட அரசாங்க அதிபரினால் கரைச்சி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டது.



சர்வதேச அனர்த்த குறைப்பு தினம் 2013



## தேசிய அனர்த்த பாதுகாப்புதின நிகழ்வுகள்

தேசிய அனர்த்த பாதுகாப்பு தினம் 26/12/2013 அன்று மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் கொண்டாடப்பட்டு 2012 வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி, பூநகரி, கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியினை பாராளுமன்ற உறுப்பினரும் கிளிநொச்சி மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்தி குழு தலைவருமான கௌரவ மு.சந்திரகுமார் அவர்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான காசோலை வழங்கப்பட்டன.



தேசிய அனர்த்த பாதுகாப்பு தினம் 2013



## அனர்த்த நிவாரணச் செயற்பாடுகள்

2012ல் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வீட்டுசேதத்திற்கான கொடுப்பனவுகள் பின்வரும் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

| பிரதேச செயலாளர் | பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | கொடுப்பனவு |
|---|---|---|
| பச்சிலைப்பள்ளி | 12 | 495,000.00 |
| பூநகரி | 20 | 941,000.00 |
| கண்டாவளை | 573 | 20,369,000.00 |
| கரைச்சி | 147 | 8,067,000.00 |

2013ல் வரட்சிக்கால குடிநீர் வழங்குவதற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் நிதி வழங்கப்பட்டு பின்வரும் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

| பிரதேச செயலாளர் பிரிவு | பயனடைந்த குடும்பங்கள் | கொடுப்பனவு |
|---|---|---|
| பச்சிலைப்பள்ளி | 774 | 252,250.00 |
| கண்டாவளை | 2552 | 124,737.00 |
| கரைச்சி | 948 | 435,000.00 |

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கண்ணகைபுரம் கிராம சேவையாளர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தினால் மரணமடைந்த சிந்துஜன் என்பவரது குடும்பத்திற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 15,000/= காசோலை வழங்கப்பட்டது.

## 5.2 சமூக மற்றும் கலாசார செயற்பாடுகள்

### அ) மாவட்ட மட்ட உளவளத்துணை பிரிவு

பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடாத்தப்பட்டது இவ் விழிப்புணர்வு நிகழ்வுகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக நடாத்தப்பட்டது.

- சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களும் மற்றும் அதனை தடுத்தலும்
- பதின்ம வயது கற்பம் மற்றும் இளவயது திருமணம்
- பதின்ம வயதில் ஏற்படும் பிரச்சினைகளும் அதனை கையாளுதலும்

இதனைப்போலவே கிராம மட்டத்திலும் உளசமூக பிரச்சினைகளை குறைப்பதை நோக்கமாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் சம்மந்தமான விழிப்புணர்வு நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன

- உளசமூகப்பிரச்சினைகளும் அதனை தடுத்தலும்
- சிறுவருக்கு ஏற்படும் வன்முறைகளும், பெற்றோரியம் தொடர்பான திறன்களும்
- மதுபோதை துஷ்பிரயோகத்தை தடுத்தல்
- வன்முறையற்ற தொடர்பாடல்
- பெற்றோரியம் தொடர்பான திறன்களும் வீட்டு வன்முறைகளும்
- குடும்ப எல்லைகள்

இதேபோல உளவளத்துணை சார்ந்த பல்வேறு பயிற்சிப்பட்டறைகளும் நிகழ்த்தப்பட்டன. இவை ஆசிரியர்கள், கிராம மட்ட நிறுவனங்கள், பெண்கள் அமைப்புக்கள், சிறுவர் இல்லப்பணியாளர்கள், சமூக ஆதரவு பணியாளர்கள், விசேட தேவையுடையவர்கள், இளங்குடும்ப தம்பதியர், போன்றவர்களை மையப்படுத்தி நிகழ்த்தப்பட்டது. அப்பயிற்சிப்பட்டறைகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக காணப்பட்டது.

- சிறுவர்களும் அவர்தம் உளசமூகப் பிரச்சினைகளும்
- திருமணத்திற்கு முன்னான உளவளத்துணை
- சிறுவர்களை விளங்கி பணியாற்றுதல்
- நெருக்கீடுகளும், நெருக்கீட்டை கையாளுதலும்
- சிறுவர் உளநலம்
- முதியோர் உளநலத்தை விளங்கிக்கொள்ளல்
- மாற்றுத்திறனாளிகளும் உளநலமும்

### (ஆ). தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

இந்த அதிகாரசபை மூலம் சிறுவர்கள், பெற்றோர் மற்றும் கற்பிணித்தாய்மாருக்கும், சிவில் சமூக திணைக்கள வேலையாட்களுக்கும் (பண்ணையில் தொழில் புரிவோர்) சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்குகளை நடாத்தி வருகிறது. பாடசாலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சிறுவர் உரிமையை பேணுதல், பொறுப்புக்களை உணரச்செய்தல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கினை நிகழ்த்தி

வருகிறது. மேலும் பாதிக்கப்பட்ட கற்றல் வசதியற்ற மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு தொண்டு நிறுவனங்களூடாக இணைப்பை ஏற்படுத்தி கற்றல் உபகரணங்கள், வாழ்வாதார உதவிகளை செய்ய வழிவகை செய்கின்றது. சிறுவர் இல்லங்களில் இருந்து பெற்றோர், பாதுகாவலருடன் மீள் இணைய விரும்பும் பிள்ளைகளை மீள் இணைப்பு செய்கின்றது.

மேலும் இம் மாவட்டத்தில் உள்ள சிறுவர் இல்லங்களை தரிசித்து இவற்றின் தராதரங்களை மதிப்பீடு செய்து இல்லங்களின் தேவைப்பாட்டையும், தரத்தினையும் உறுதி செய்கின்றது. மேலும் குடும்ப வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களை பாதுகாப்பதற்கு பாதுகாப்பு இல்லம் கனகபுரத்தில் அமைப்பதற்கான வேலைத்திட்டங்களை சிறுவர் பெண்கள் சார் அமைப்புக்களுடன் இணைந்து துரிதமாக முன்னெடுத்து வருகிறது.

**2013 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்ட விபரநிலை பினவருமாறு:**

| **செயற்பாடுகள்** | **திட்டங்களின் எண்ணிக்கை** | **பங்குபற்றியவரின் எண்ணிக்கை** |
|---|---|---|
| விழிப்புணர்வு கருத்தரங்கு | 33 | 2027 |
| சிறுவர் இல்ல மேற்பார்வை | 18 | 353 |
| மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டி பாடசாலைப்பொதி | 04 | 420 |
| பயிற்சிப்பட்டறை (ஆசிரியர், கிராம மட்ட அமைப்புக்கள், அரச உத்தியோகத்தர்கள்) | 25 | 769 |
| பாடசாலை தரிசிப்பு வீட்டு தரிசிப்பு | 68 | 122 |
| கலந்துரையாடல் (அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனம்) | 38 | 426 |
| 1929 தொடர்பான முறைப்பாடு | 16 | 26 |
| சிறுவர் கழகம் மற்றும் சர்வதேச சிறுவர் தினம் | 12 | 1756 |
| சிறுவர் தொடர்பான துண்டுப்பிரசுரம் வழங்கல் | 30 | 15,000 |
| கற்பிணித்தாய்மார்களுக்கான அவசர உதவி பொருள் வழங்கல் | 30 | |
| பாடசாலை இடைவிலகிய மாணவர்களை மீள் இணைத்தல் | 05 | 76 |

## (இ) புனர்வாழ்வு அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள்

1. **பொதுமக்கள் சொத்திழப்பு கொடுப்பனவு.**

பொதுமக்கள் சொத்திழப்பு கொடுப்பனவைப் பெறுவதற்காக புனர்வாழ்வு அதிகார சபைக்கு பிரதேச செயலர் பிரிவுகளின் அடிப்படையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள விபரங்கள் பின்வருமாறு

| பிரிவு | எண்ணிக்கை |
|---|---|
| கரைச்சி | 4144 |
| கண்டாவளை | 1562 |
| பளை | 09 |
| பூநகரி | 1312 |
| மொத்தம் | 7027 |

2. **புனர்வாழ்வு அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பொதுமக்களுக்கான சுயதொழில் கடன் திட்டம்.**

இந்த கடன் திட்டத்திற்காக 2012ம் ஆண்டுக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய பயனாளிகளக்கான நேர்முகத்தேர்வில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் விபரம்.

| பிரிவு | எண்ணிக்கை |
|---|---|
| கரைச்சி | 122 |
| கண்டாவளை | 36 |
| பளை | 44 |
| பூநகரி | 52 |
| மொத்தம் | 254 |

இந்த 254 பயனாளிகளுள் 127 பயனாளிகள் மாத்திரம் சமூகமளித்து அவர்களுக்கான கடன் வழங்குதல் இலங்கை வங்கி மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது.

3. **விதவைகளுக்கான சுயதொழில் கடன் திட்டம்.**

இக் கடன் திட்டத்திற்காக ஏற்கனவே விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய பயனாளிகள் நேர்முகத்தேர்வுக்கு தெரிவுசெய்யப்பட்டனர். அதன் விபரங்கள் வருமாறு

| பிரிவு | எண்ணிக்கை |
|---|---|
| கரைச்சி | 124 |
| கண்டாவளை | 20 |
| பளை | 12 |
| பூநகரி | 17 |
| மொத்தம் | 173 |

அப் பயனாளிகளில் 120 பயனாளிகள் நேர்முகத்தேர்வில் கலந்துகொண்டனர். இவர்களுக்கான கடன்கள் இலங்கை வங்கி மூலம் வழங்கப்பட்டுவருகிறது.

4. வீடு பாதிப்படைந்த புனருத்தாரணம் செய்வதற்கான கடன் திட்டம். (ரூ 250,000.00) இதில் கரைச்சி பிரதேச பிரிவில் 25 பயனாளிகள் இக் கடனுக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

5. **புனர்வாழ்வு பெற்றவர்களுக்கான சுயதொழில் கடன் திட்டம்**.

இக் கடன் திட்டமானது புனர்வாழ்வு பெற்று சமூகத்தோடு ஒன்றிணைக்கப்பட்டவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதில் அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் வருமாறு.

| **பிரிவு** | **எண்ணிக்கை** |
|---|---|
| கரைச்சி | 85 |
| கண்டாவளை | 29 |
| பளை | 15 |
| பூநகரி | 13 |
| மொத்தம் | 142 |

6. **போரினால் பாதிப்படைந்த ஆலயங்களை புனரமைப்பு செய்தல்.**

போரினால் சேதமடைந்த ஆலயங்களை புனரமைப்பு செய்வதற்காக தலா ரூ 100,000 வரை 6 ஆலயங்களுக்கு வழங்கப்பட்டது. அதன் விபரம் வருமாறு.

| **பிரிவு** | **எண்ணிக்கை** |
|---|---|
| கரைச்சி | 01 |
| கண்டாவளை | 03 |
| பச்சிலைப்பள்ளி | 02 |
| மொத்தம் | 06 |

7. **போரினால் இறந்த காயமுற்ற பயனாளிகளுக்கான கொடுப்பனவு.**

போரினால் இறந்தவர்களுக்காக சாதாராண பொதுமக்களுக்கு ரூ100,000 அரச ஊழியர்களுக்கு ரூ150,000 நட்டஈடாக வழங்கப்படுகிறது. காயமடைந்தவர்களில் சாதாரண பொதுமக்களுக்கு ரூ 50,000, அரச ஊழியர்களுக்கு ரூ 100,000 வழங்கப்படுகின்றது. இதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 2013ம் ஆண்டு கொடுப்பனவு வழங்கப்பட்ட நட்டஈட்டு விபரம் வருமாறு.

| **பிரிவு** | **இறப்பு** | **காயம்** |
|---|---|---|
| கரைச்சி | 85 | 21 |
| கண்டாவளை | 52 | 16 |
| பளை | 25 | 01 |
| பூநகரி | 09 | 04 |
| **மொத்தம்** | **171** | **42** |

**8. அரச ஊழியர்களுக்கான சொத்தழிவுக் கொடுப்பனவு.**

அரச உழியர்களுக்கான சொத்திழப்புக் கொடுப்பனவானது ரூ 150,000 வழங்கப்படுகின்றது. அதில் பிரதேச செயலக ரீதியாக 29 பயனாளிகளுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

| **பிரிவு** | **எண்ணிக்கை** |
|---|---|
| கரைச்சி | 20 |
| பளை | 06 |
| பூநகரி | 03 |
| மொத்தம் | 29 |

பொதுமக்கள் சொத்திழப்பு கொடுப்பனவு தலா ரூ 100,000 நான்கு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.இக் கொடுப்பனவுகள் யாவும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் கொழும்பில் அலரி மாளிகையில் வைத்து வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

## (ஈ) விளையாட்டுத்துறை

வேல்ட் விசன் அனுசரனையுடன் 2013 ஆண்டு 2012ல் பிரதேசவிளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டிய பிரதேச கழகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 25000/= பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. பங்குனி மாதம் பிரதேச செயலக கழகங்களிற்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக போட்டிகள் இடம் பெற்றன. பங்குனிமாதம் இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தால் நடாத்தப்படும் தேசியகனிஸ்ட மெய்வல்லுனர் போட்டிக்கு கிளிநொச்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 06 போட்டியாளர்கள் பங்குபற்றினார்கள். மேலும் மாகாண மட்ட உதைப்பந்தாட்ட போட்டிவவுனியாவில் நடைபெற்றது. அப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணியினர் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டனர். இதே கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணி வடமாகணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய மட்டத்திலும் விளையாடி அரையிறுதிப் போட்டிவரை சென்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மாகாண மட்ட வேகநடை, மரதன், கிறிக்கற் போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக நடைபெற்றது. இப் போட்டியின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் பங்குபற்றியிருந்தார். இப்போட்டிகளில் பெண்களுக்கான கிறிக்கற் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணி இரண்டாமிடத்தை பெற்றுக் கொண்டது. மேலும் ஆண்களுக்கான மரதன் போட்டியிலும் பெண்களுக்கான மரதன் போட்டியிலும் கிளிநொச்சி மாவட்ட அணி 3ம் இடங்களை பெற்றுக்கொண்டது. அத்தோடு பெண்களுக்கான வேகநடைப் போட்டியிலும் 3ம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

மாகாண மட்ட கராட்டி போட்டிகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இப் போட்டிகளில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணியினர் வடமாகாணத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் ஆண்கள் பிரிவில் இரண்டு வெள்ளிப் பதக்கங்களும் 3 வெண்கலப் பதக்கங்களையும் கிளிநொச்சி மாவட்ட போட்டியாளர்கள் பெற்றுக் கொண்டனர். ஆனி 16ம் திகதி தொடக்கம் 21ம் திகதி வரை தேசிய போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட கிறிக்கற் அணிக்குரிய பயிற்சி முகாம் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரனையுடன் கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. மாகாண மட்ட எல்லே போட்டிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்றது. இப் போட்டியில் ஆண்களுக்கான போட்டிகள் கிளி/மத்தியகல்லூரி மைதானத்திலும் பெண்களுக்குரிய போட்டிகள் தருமபுரம் பொது விளையாட்டு மைதானத்திலும் சிறப்பாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

மாகாண ரீதியான கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போட்டிகள் மன்னார் மாவட்டத்தில் நடைபெற்றது. இப்போட்டிகளில் கரப்பந்தரட்டம், வலைப்பந்தாட்டப் போட்டிகள் இரண்டிலும் பெண்கள் அணியினர் 2ம் இடத்தைபெற்றுக் கொண்டனர்.

ஆடி மாதம் 21ந் திகதி தொடக்கம் 23 திகதி வரை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுப் போட்டிகள் விமரிசையாக நடாத்தப்பட்டது. இப் போட்டியின் பிரதமவிருந்தினராக வடமாகாண விளையாட்டுப் பணிப்பாளர் திரு.ராஜரணசிங்க அவர்கள் பங்குபற்றி சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது

மாகாண மட்ட யூடோபோட்டிகள் கிளிநொச்சியில் நடைபெற்றன. இப்போட்டிகளில் கிளிநொச்சி மாவட்ட அணி சம்பியன்களாகியதுடன் இவ் அணியே தேசிய போட்டிகளில் வட மாகணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆவணி 2ம் 3ம் திகதிகளில் வவுனியா பொது மைதானத்தில் நடைபெற்ற வடமாகாண விளையாட்டு விழாவில் கிளிநொச்சி மாவட்டம் பங்குபற்றி சிறப்புறச் செயற்பட்டதுடன் 51 புள்ளிகளைப் பெற்றுமுதல் தடவையாக 4ம் இடத்தைபெற்றுக்கொண்டதுடன் மெய்வல்லுனர் போட்டிகளில் கூடியளவு பதக்கங்களைப் பெற்றுக் கொண்டது. நாவலப்பிட்டியவில் நடைபெற்ற கனிஸ்ட யூடோப்போட்டியில் பங்கு பற்றிய கிளிநொச்சி மாவட்ட வீராங்கனை 3ம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். தேசிய விளையாட்டு விழா புரட்டாதி மாதம் நாவலப்பிட்டியவில் நடைபெற்றது. மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மாவட்ட வீரர்கள் சிறப்பாக பங்கு பற்றியிருந்தனர் தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மரதன் போட்டியில் கிளிநொச்சி மாவட்டவீரர் அன்ரனிடெல்மன் 2ம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். குறிப்பாக வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி முதன்முறையாக தேசியப் போட்டிகளில் யூடோ, உதைப்பந்து(பெண்கள்), கிறிக்கற்(பெண்கள்), கராட்டி(பெண்கள்)அணிகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**கிளிநொச்சிமாவட்டத்தின் விளையாட்டுக்களில் திடீர் பெறுபேறுஅதிகரிப்பு**

2013ம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் விளையாட்டுச் செயற்பாடுகளில் கூடியளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ள ஆண்டாக கொள்ள முடியும். கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றில் கூடியளவு குழு விளையாட்டு அணிகள் மாகாண ரீதியாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளன. மேலும் இவ்வருடம் இவ்வாறுவெற்றிபெற்றஅணிகள் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தேசியப் போட்டிகளில் பங்குபற்றியிருந்தமையானது அடுத்தடுத்த ஆண்டுகளில் இந்தப் பெறுபேறு மேலும் அதிகரிப்பதற்கான சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் இதுவரை காலமும் வடமாகாணத்தின் விளையாட்டு பெறுபேற்றின் அடிப்படையில் 5ம் நிலையிலிருந்து இவ்வருடம் 51 புள்ளிகளைப் பெற்று 4ம் இடத்துக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## உ). பண்பாட்டலுவல்கள் திணைக்களம் செயற்பாட்டறிக்கை

**வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் ஆற்றப்பட்ட செயற்பாடுகளாக பின்வருவனவற்றினை குறிப்பிடலாம்.**

- மாவட்டத்தின் முக்கிய பிரமுகர்களை நினைவு கூரும் வகையில் ஏ9 வீதியின் பிரதான சுற்றுவட்டப்பாதைகளில் ஞாபகார்த்தசிலைகளை அமைப்பதற்கான முன்னனுமதிக்கான கோரிக்கைகள் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டமை.
- மாவட்டத்தில் கடமையாற்றும் அரச அலுவலர்கள் மற்றும் கலைமன்றங்களிடையே கலைவெளிப்பாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.
- சிறுவர்களை வளப்படுத்தும் நோக்கில் சிறுவர்களுக்கான கதைசொல்லல் நிகழ்வினை அறிமுகப்படுத்தியமை.
- சிலைகள் அமைப்பதற்கான அமைவிடங்களை அடையாளப்படுத்தியமை.
- மணிக்கூண்டுக்கோபுரம் அமைப்பதற்கான முன்னனுமதிக்கான கோரிக்கைகள் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டமை.
- வடமாகாண கௌரவ ஆளுநர் விருது நான்கு கலைஞர்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டமை.
- நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற நவராத்திரி விழாவினை முன்னிட்டு இம் மாவட்டத்திலிருந்து கிளி/அம்பாள்குளம் விவேகானந்த வித்தியாசாலை மாணவர்களது கலைநிகழ்வு அளிக்கை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டமை.
- வடமாகாண தமிழ் இலக்கிய விழாவிற்கு இம்மாவட்ட கலைஞர்களது கலைநிகழ்வினை வழங்கியமை.

## பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் (மத்திய அரசு) மூலம் ஆற்றப்பட்ட செயற்பாடுகள்

### தேசிய உணவு கலாசார மேம்பாட்டு விழா – 2013

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தேசிய உணவுக் கலாசார மேன்பாட்டு விழா – 2013 இனை 05-04-2013 அன்று மாலை 3 மணியளவில் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. மேலும், இம் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமாகிய மு.சந்திரகுமார் சிறப்பித்துள்ளதுடன் நிகழ்வில் அரங்குசார் சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் மற்றும் எமது நாட்டிற்கே உரித்தான பாரம்பரிய உணவு வகைகளை தயாரிப்பது தொடர்பான செயன் முறைகளும் இடம் பெற்றன.

### தேசிய கலை இலக்கிய போட்டித் தொடர் – 2013

கலாசார அலுவல்கள் திணைக்களமானது 2013ம் ஆண்டின் இலக்கிய கலை பெருவிழாவுடன் இணைந்ததாக ஆண்டு தோறும் நடாத்தி வருகின்ற கலை இலக்கிய போட்டித் தொடர் பிரதேச, மாவட்ட, தேசிய, ரீதியில் மூன்று கட்டங்களாக நடாத்தப்பட்டது. அந்த வகையில், இப் போட்டிகள் பாடசாலை மட்ட போட்டிகள், திறந்த பிரிவு போட்டிகள் என்ற அடிப்படையில் நடாத்தப்பட்டது. கரைச்சி பிரதேச செயலகம் சார்பாக பத்து போட்டியாளர்களும், கண்டாவளை பிரதேச செயலகம் சார்பாக இருபத்தொரு போட்டியாளர்களும், பூநகரி பிரதேச செயலகம் சார்பாக மூன்று போட்டியாளர்களும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் சார்பாக ஒன்பது போட்டியாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கான மாவட்ட மட்ட போட்டியில் 1ம், 2ம், 3ம் இடங்களை கரைச்சி பிரதேச செயலகம் சார்பில் 08 போட்டியாளர்களும் கண்டாவளை பிரதேச செயலகம் சார்பில் 11 போட்டியாளர்களும் பூநகரி பிரதேச செயலகம் சார்பில் 02 போட்டியாளர்களும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் சார்பில் 06 போட்டியாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

### அரச சிறுவர் ஓவியப் போட்டி -2013

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அரச சிறுவர் ஓவியப் போட்டித் தொடரானது முதலாம் சுற்றாக பிரதேச செயலக ரீதியில் நடைபெற்று, இரண்டாம் சுற்று போட்டிகள் மாவட்ட மட்டத்தில் கிளி/மத்திய கல்லூரியில் 09.07.2013 அன்று 9.00 மணியளவில் நடைபெற்றதுடன், இந் நிகழ்விற்கு அரச அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமை தாங்கியதுடன், கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஓவியக் குழுவினர் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இவ் இரண்டாம் சுற்றுப் போட்டியில் 150 மாணவ மாணவிகள் பங்குபற்றியிருந்தனர்.

## (ஊ) சமூக சேவை

### 01. அ) பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு-

இக் கொடுப்பனவானது மிகவும் வறிய நிலையிலுள்ள குடும்பங்களிற்கு அவர்கள் வசிக்கும் பிரதேச உப தபாலகங்கள் ஊடாக பின்வரும் அடிப்படையில் கொடுப்பனவு வழங்கப்படுகிறது

- 1 அங்கத்தவர் கொண்ட குடும்பங்களிற்கு ரூபா 250 வீதமும்
- 2 அங்கத்தவர் கொண்ட குடும்பங்களிற்கு ரூபா 300 வீதமும்
- 3 அங்கத்தவர் கொண்ட குடும்பங்களிற்கு ரூபா 350 வீதமும்
- 4 அங்கத்தவர் கொண்ட குடும்பங்களிற்கு ரூபா 400 வீதமும்
- 5 அங்கத்தவர் கொண்ட குடும்பங்களிற்கு ரூபா 450 வீதமும்
- 6 அங்கத்தவரிற்கு மேற்பட்ட குடும்பங்களிற்கு ரூபா 500 வீதமும்

பிரதேச செயலக ரீதியாக 2013 இல் வழங்கப்பட்ட கொடுப்பனவு விபரம் வருமாறு.

| பிரதேச செயலகம் | தொகை | பயனாளிகள் |
|---|---|---|
| கரைச்சி | 13,920,000 | 3350 |
| கண்டாவளை | 7,800,000 | 2063 |
| பச்சிலைப்பள்ளி | 3,000,000 | 851 |
| பூநகரி | 6,000,000 | 1624 |

### ஆ) நோய் உதவிக் கொடுப்பனவு-

#### I) காச நோய்

நோயாளிக்குரிய கொடுப்பனவாக ரூபா 300 வழங்கப்படுகிறது.

பிரதேச செயலக ரீதியாக 2013 இல் வழங்கப்பட்ட கொடுப்பனவு விபரம் வருமாறு:

| பிரதேச செயலகம் | தொகை | பயனாளிகள் |
|---|---|---|
| கரைச்சி | 2600 | 07 |
| கண்டாவளை | 600 | 02 |
| பச்சிலைப்பள்ளி | 300 | 01 |
| பூநகரி | 3300 | 07 |

#### II)புற்று நோய்

நோயாளிக்குரிய கொடுப்பனவாக ரூபா 500 வீதம் அவர்கள் வசிக்கும் பிரதேச உப தபாலகங்கள் ஊடாக கொடுப்பனவு செய்யப்பட்டு வருகிறது.

பிரதேச செயலக ரீதியாக 2013 இல் வழங்கப்பட்ட கொடுப்பனவு விபரம் வருமாறு:

| பிரதேச செயலகம் | தொகை | பயனாளிகள் |
|---|---|---|
| கரைச்சி | 37200 | 75 |
| கண்டாவளை | 16000 | 32 |
| பச்சிலைப்பள்ளி | 6500 | 13 |
| பூநகரி | 8000 | 16 |

**III)சிறுநீரக நோய்**

நோயாளிக்குரிய கொடுப்பனவாக ரூபா 500 வீதம் அவர்கள் வசிக்கும் பிரதேச உப தபாலகங்கள் ஊடாக கொடுப்பனவு செய்யப்பட்டு வருகிறது.

பிரதேச செயலக ரீதியாக 2013 இல் வழங்கப்பட்ட கொடுப்பனவு விபரம் வருமாறு:

| பிரதேச செயலகம் | தொகை | பயனாளிகள் |
|---|---|---|
